**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 92 நாள்: 14.04.2026**

**சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்புகள் நாளை நடைபெறவுள்ளதை முன்னிட்டு, நாளை (15.04.2026) ஒரு நாள் மட்டும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், சென்னைப் பள்ளிகள், அங்கன்வாடி மையங்களுக்கு உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026 வாக்குப்பதிவு 23.04.2026 அன்று நடைபெறுவதை முன்னிட்டு, வாக்குப்பதிவு பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு முதற்கட்ட பயிற்சி வகுப்புகள் 28.03.2026 அன்று நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக, நாளை (15.04.2026) வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளது.

மேலும், இந்த பயிற்சி வகுப்புகள் நடைபெறும் நாள் அலுவலக வேலை நாள் என்பதால் நாளை (15.04.2026) (புதன்கிழமை) அன்று ஒரு நாள் மட்டும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், சென்னைப் பள்ளிகள், அங்கன்வாடி மையங்களுக்கு உள்ளூர் விடுமுறையாக அறிவித்து உத்தரவிடப்படுகிறது. அந்நாளினை ஈடுசெய்யும் விதமாக வருகின்ற 18.04.2026 (சனிக்கிழமை) அன்று வேலை நாளாக அறிவிப்படுகிறது என சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**“ தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா ”**

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**